Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

ஏடு 7 EELA NADU இதழ் 134

National Tamil Daily தேசிய தினசரி


(25-6-65)

விசுவாவசு ஆனி 11 வைர் பிறை 24 வெள்ளிக்கிழமை

**ஈழநாடு**
சந்தா விபரம்

இந்தியா - இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

நீடித்த பாவனைக்கு
சொனென்ஷீன் சொனென்ஷீன்

பற்றறிகளையே உபயோகியுங்கள்
வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:-
துரை அன் கோ
23/3 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தமிழரசு- காங்கிரஸ்

# "தகராறை நீடிக்க விரும்பவில்லை"

## திரு. அமிர்தலிங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

**தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துக்கும் தங்களுக்குமிடையே உள்ள தகராறை நீடிக்கத் தாங்கள் விரும்பவில்லையென்று தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

திரு. அமிர்தலிங்கம் தமது அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

திரு. பொன்னம்பலத்திற்கும் எமது கட்சிக்குமிடையேயுள்ள தகராறை நீடிக்க நாம் விரும்பவில்லை. ஆனால் திரு. பொன்னம்பலம் சமீபத்தில் வெளியிட்ட பத்திரிகை அறிக்கையில் இருக்கும் சில கூற்றுக்களைத் திருத்தவேண்டியிருக்கிறது.

### பண்டாரநாயக்கா ஒப்புக்கொள்ளவில்லை

பண்டாரநாயக்கா-செல்வநாயகம் உடன்படிக்கை பற்றிப் பொன்னம்பலம் பின்வருமாறு கூறுகிறார்: "உடன்படிக்கை பற்றி நான் எனது வியாக்கியானத்தை வெளிப்படுத்தினேன். இதை நீதியானதும், நேர்மையானதுமென திரு. பண்டாரநாயக்கா ஒத்துக் கொண்டார்." இது உண்மையல்ல. உடன்படிக்கை பற்றிய திரு. பொன்னம்பலத்தின் வியாக்கியானத்தைத் தாம் ஏற்றுக் கொள்ளவில்லையென திரு. பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் திட்டவட்டமாகக் கூறியுள்ளார். பாராளுமன்ற அதிகாரப் பதிவேட்டிலிருந்தே நாம் இதை நிரூபிக்க முடியும். 81ம் தொகுதி ஹன்சாட்டிலே 150ம் பத்தியிலே திரு. பொன்னம்பலம் பின்வருமாறு கூறியிருக்கிறார்:

திரு. பொன்னம்பலம்: "உத்தேசத்தில் இருக்கும் இரண்டு மசோதாக்கள்பற்றியும், உடன்படிக்கை பற்றியும் எனது வியாக்கியானமே சரியானதென்றும் எனது கௌரவ நண்பர் பிரதமமந்திரி அவர்கள் எனது அவ்வியாக்கியானத்தை எழுத்துக்கெழுத்து பிரசுரிக்குமளவு தூரத்திற்குப் போயிருந்ததை நான் அறிந்தது பற்றிப் பெருமகிழ்ச்சி அடைந்தேன்."

திரு. பண்டாரநாயக்கா: "இல்லை இல்லை. இந்த ஒப்பந்தம் சிங்களவரைத் தமிழருக்குக் காட்டிக்கொடுத்துவிட்டது என்று கூறிய எதிர்ப்பக்கத்திலுள்ள (அதாவது சிங்கள) மடையர்களுக்கு நான் எடுத்துக்காட்ட முயன்றிருக்கிறேனே அல்லாது வேறல்ல. அந்தக் காலத்தில் நீர் ஒரு பிரபல தமிழன்."

திரு. பொன்னம்பலம்: "கௌரவ பிரதமமந்திரி அவர்கள் எனது வியாக்கியானத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுதான் நிலைமை!"

திரு. பண்டாரநாயக்கா: "தமிழர்களைக் காட்டிக் கொடுத்துவிட்டது ஒப்பந்தமென்று கூறியவர்கள் வியாக்கியானத்தையோ, திரு. பொன்னம்பலத்தின் வியாக்கியானத்தையோ நான் ஏற்றுக் கொள்ளவில்லை, ஒப்பந்தம் சிங்களவரைக் காட்டிக் கொடுத்துவிட்டதென்று கூறுபவர்களின் வியாக்கியானத்தையும் நான் ஏற்றுக்கொள்ளவில்லை."

திரு. பொன்னம்பலம்: "இவ்வாறு எனது கௌரவ நண்பர் என்னை மானபங்கப்படுத்த முயன்றிருப்பது பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன், அவர் இதுவும் சரியல்ல என்கிறார்; அதுவும் சரியல்ல என்கிறார்."

திரு. பண்டாரநாயக்கா: 'சிங்களவர் காட்டிக்கொடுக்கப்பட்டார்கள் என்பதும் இல்லை தமிழர்கள் காட்டிக்கொடுக்கப்பட்டார்கள் என்பதும் இல்லை'

பாராளுமன்ற பதிவேட்டை யாரும் புரட்டிப் பார்த்துக் கொள்ளலாம். அடுத்தபடியாக திரு. பொன்னம்பலம் எம்மீது ஒரு எதிர்க்குற்றச்சாட்டைச் சுமத்துகிறார். நாம் தான் அவரைத்தாக்க ஆரம்பித்தோம் என்றும் அதன்மூலம் தேசிய அரசாங்கத்தை நாம் இக்கட்டு நிலைக்கு உள்ளாக்குகிறோம் என்றும் கூறுகிறார், அவர். ஆனால் மே மாதப் பிற்பகுதியில் வெளியிட்ட ஓர் பத்திரிகை அறிக்கை மூலம் திரு. பொன்னம்பலம் தான் இந்தத் தொடரை ஆரம்பித்துவைத்தார் என்பது தெளிவான ஒன்று.

### செல்வநாயகம் கூறியது என்ன?

மேலும் திரு. பொன்னம்பலம் கூறுகிறார், "இணைப்பாட்சிக்கு இவ்வொப்பந்தம் முதற்படி என்று திரு. செல்வநாயகம் கூறிக்கொள்கிறார்" என்று திரு. செல்வநாயகம் இவ்வாறு என்றுமே கூறியதில்லை. உண்மையிலே திரு. செல்வநாயகம் கூறியது இதுதான்: "இவ் உடன்படிக்கை ஒரு வெற்றியும் அல்ல தோல்வியுமல்ல ஆனால் நிலைமையை ஓரளவு சரிக்கட்டுவதான ஏற்பாடு.

வட்டமேசை மகாநாடு பற்றி திரு. செல்வநாயகம் பதட்டப்படுகிறார். என்று கூறுகிறார் திரு. பொன்னம்பலம், நிலைமை அதுவல்ல அரசாங்கத்திற்கும் தமிழ்பேசும் மக்களுக்கும் ஏற்படக்கூடிய ஒப்பந்தம் எதையும் நாசமாக்கக்கூடிய ஒரே நிச்சயமான வழி இந்த வட்டமேசைமகாநாடு என்று திரு. செல்வநாயகமும் எமது கட்சியும் நியாயமாகவே பயப்படுகிறார்கள். இதை திரு. பொன்னம்பலம் நன்றாக அறிவார்,

திரு. சிவசிதம்பரம் இலங்கை ஜனநாயக காங்கிரசைச் சேர்ந்த திரு அசீசுக்கு தமிழ்க் காங்கிரஸ் நிறைவேற்றிய தீர்மானமொன்றை அனுப்பிவைத்

(6-ம் பக்கம் பார்க்க)

## தோட்டப் பாடசாலைகளின் கேவல நிலை

### மந்திரிக்கு நியமன அங்கத்தவர் மகஜர்

பம்பலப்பிட்டி, வியா.

தோட்டப்பகுதிப் பாடசாலைகளில் கல்வி வெறும் ஏமாற்று வித்தையாகவும் போலித்தனமானதாகவுமிருக்கிறது. தோட்டப் பாடசாலைகளில் தான் முதன் முதலில் கட்டாயக் கல்வி அமுல் நடத்தப்பட்டது. ஆனால் கடந்த 58 வருட காலமாக இது எதுவித முறையானபலனையும் அளிக்கவில்லை. இங்குள்ள பாடசாலைகளின் அவல நிலையை நீக்குவதற்காக இங்குள்ள பாடசாலைகளை உடனடியாக அரசாங்கம் பொறுப்பேற்று சீர்திருத்தி அமைக்க வேண்டும்.

இவ்வாறு நியமன அங்கத்தவர் திரு. வி. அண்ணாமலை கல்வி மந்திரிக்கு சமர்ப்பித்துள்ள மகஜரொன்றில் தெரிவித்துள்ளார்.

திரு. அண்ணாமலை தமது மகஜரில் மேலும் எடுத்துக் கூறியுள்ளதாவது:

### உலகிலேயே கேவலமான நிலை

தோட்டப் பாடசாலைகளில் நிலவும் மோசமான நிலை உலகின் வேறெந்தப் பகுதியிலுள்ள பாடசாலைகளிலும் நிலவவில்லையெனக் கூறலாம். இங்கப்பாடசாலைகளுக்கென புறம்பான விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

நாட்டின் நலன் கருதியும் சமூகத்தின் நலன் கருதியும் பின்வரும் யோசனைகளை அமுல் நடத்தி இங்குள்ள பாடசாலைகளைப் பொறுப்பேற்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

### பாடசாலைகள்

1. மற்றப் பாடசாலைகளில் போதிக்கப்படும் பாடங்கள் இங்குள்ள பாடசாலைகளிலும் போதிக்கப்படவேண்டும். 2. சமூக கைத்தொழில் பாடங்கள் போதிப்பதற்கு அதிக அக்கறை காட்டப்படவேண்டும். 3. ஒவ்வொரு ஆரம்ப பாடசாலைகளிலும் 5-ம் வகுப்புவரை வகுப்புகள் நடத்தப்படவேண்டும், 4. இவ்வித 10 ஆரம்ப பாடசாலைகளுக்கும் மத்தியில் 8-ம் வகுப்புவரை கொண்ட நல்ல வசதிகளடங்கிய ஒருபாடசாலை இருக்கவேண்டும். 5. தோட்டப்பகுதியில் ஒவ்வொரு நகரப் புறத்திலும் ஒரு மகா வித்தியாலயம் இயங்கவேண்டும், இந்த மகாவித்தியாலயத்தில் மாணவர்களும் மாணவிகளும் கல்விபெற அனுமதிக்கப்படவேண்டும்.

### ஆசிரியர்கள்

1. போதிய ஆசிரியர்கள் சகல பாடசாலைகளிலும் நியமிக்கப்படவேண்டும். இவர்கள் தோட்டப் பகுதியிலிருந்து தெரிவுசெய்யப்படவேண்டும். இப்பகுதியில் ஜி. சி. ஈ. எஸ். எஸ். சி. சித்தியெய்திய பல இளைஞர்கள் வேலையற்றிருக்கிறார்கள். மாணவ ஆசிரியர்களைத்தெரிவு செய்யும்போது சில வருடங்களுக்காவது அவர்களுக்கு அரசகருமமொழித் தேர்ச்சி கட்டாயப்படுத்தப்படாதிருக்கவேண்டும். இங்கு 10க்கு மேற்படாத பட்டதாரிகள் மட்டுமே இருக்கிறார்கள் இவர்களில் சிலர் வேலையற்றிருக்கிறார்கள். தோட்டப்பகுதி பூராவும் உள்ள பாடசாலைகளில் ஒரு சில ஆசிரியர்களே இருக்கிறார்கள், இங்கு போதிக்கும் ஆசிரியர்கள் 10 வருட சேவையின்பின் சேவைக்காலத் தகுதிப் பத்திரம் பெறக்கூடிய வாய்ப்பளிக்கப்படவேண்டும். 1962-ம்வருடத்திலிருந்து இந்த ஆசிரியர்களுக்கிருந்து வந்த பயிற்சிபெறும் சலுகை மறுக்கப்பட்டுள்ளது. இது மீண்டும் இவர்களுக்கு கிடைக்க விரைவில் வழி அமைக்கப்படவேண்டும்.

(2-ம் பக்கம் பார்க்க)

## இன்று வெளிநாட்டு மந்திரிகள் மகாநாடு நடைபெறுமா?

### அல்ஜீயர்ஸில் இழுபறிப் போர்

அல்ஜியர்ஸ், ஜூன் 24:

நாளை நடைபெறவிருக்கும் ஆசிய ஆபிரிக்க வெளிநாட்டு மந்திரிகள் மகாநாட்டையும் உச்சித் தலைவர்கள் மகாநாட்டையும் ஒத்திவைப்பதா இல்லையா என்பதுபற்றி இன்று இங்கு விவாதம் நடைபெற்றது.

மகாநாட்டுக்கு பிரதிநிதிகள் வர அவகாசம் அளிக்குமுகமாவே வெளிநாட்டுமந்திரிகள் மகாநாடு நாளைவரை ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

அல்ஜீரியாவிலுள்ள இடதுசாரியினர் நாளை பென்பெல்லாவுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள். கெய்ரோவில் 100 மாணவர்கள் பென்பெல்லாவை ஆதரித்து ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

அல்ஜீயர்ஸ் உச்சித்தலைவர்கள் மகாநாட்டை ஒத்தி வைக்க வேண்டும் என சைப்பிரஸ் அதிபர் மக்காரியோஸ் கருத்துத் தெரிவித்திருக்கிறார். ஆனால் மகாநாடு நடத்தப்பட்டால் தாம் கலந்து கொள்ளத் தயாராய் இருப்பதாயும் அவர் கூறினார்.

அல்ஜீரிய புரட்சி பீடம் போர்க்குழுச் சக்தியின் அடிப்படையைக் கொண்டது என கியூபா அறிவித்திருக்கிறது.

[illegible] திர 28-ம் திகதி அல்ஜியர்ஸ் செல்லவிருக்கிறார்.

## காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு இன்று முடிவு?

லண்டன், ஜூன் 24

காமன்வெல்த் பிரதம மந்திரிகள் இன்று கரிபியன் நிலைமை பற்றியும், டொமினிக்கன் குடியரசு பற்றியும் விவாதம் நடத்தினார்கள்.

காமன்வெல்த் ஸ்தாபனம் ஒன்றையும், காமன்வெல்த் பார்லிமெண்ட் ஒன்றையும் அமைப்பது பற்றி பிறகு முடிவு செய்யப்படும் என அறிவிக்கப்படுகிறது.

மகாநாடு நாளை முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மகாநாடு முடிவடைந்தபின் அறிக்கை ஒன்று வெளியிடப்படும்.

இன்று பிரதம மந்திரிகள் உலகநிலைமை பற்றி பொதுவாக விவாதம் நடத்தினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

'நான்' என்ற அகந்தையை ஒழிப்பதுவே துறவாகும்; இமய மலைக்கு ஓடி விடுவதன்று.
—சுவாமி சிவானந்தர்


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Pox 49. Jaffna.
Grams: "EELANADU" Jaffana
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு
ஆனி 11உ (25-6-65)


## தொழிற் சங்கங்கள்

இலங்கையிலே தொழிற் சங்க சட்டத்தை நல்ல முறையில் திருத்தப் போவதாக தொழில் உதவி மந்திரி, ஜெனிவாவில் நடைபெறும் சர்வதேச தொழில் மகாநாட்டில் அறிவித்துள்ளது வரவேற்கத் தக்கதாகும்.

இப்போதுள்ள தொழிற் சங்க சட்டப்படி 7 தொழிலாளர் கையொப்பமிட்டு ஒரு சங்கம் அமைக்க முன்வந்தால் அதைப் பதிவு செய்ய மறுக்கக் கூடாது. இதனால் சென்ற பத்துவருட காலத்துக்குள்ளாக தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை சுமார் 250 விருந்து, ஆயிரத்துக்கு அதாவது நான்கு மடங்கு அதிகரித்து விட்டனவாம்! ஒவ்வொரு அரசியல் கட்சியும் அரசியல் தொழிற் சங்கங்களை போட்டா போட்டியுடன் ஆரம்பித்துள்ளதால், தொழிலாளர் ஒற்றுமையும், தொழில் அமைதியும் எப்படி பாதிக்கப்பட்டுள்ளதென்பதை விளக்கத் தேவையில்லை.

இதை உணர்ந்து இனி ஒரு தொழிலில் உள்ளவர்களிலே குறைந்தது நூற்றுக்கு 40 தொழிலாளராவது சேர்ந்துள்ள தொழிற் சங்கத்தையே அங்கீகரிக்க வேண்டுமென்று சட்டம் செய்யப் போவதாக உதவி மந்திரி தெரிவித்துள்ளார். ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கம்தான் இருக்க வேண்டுமென்றும் இப்பத்திகளிலே நாமும் பன்முறை வலியுறுத்தி இருக்கின்றோம். மந்திரியின் யோசனை அமுலுக்கு வந்தால் ஒரு தொழிலில் இரு யூனியன்களுக்கு மேல் இருக்க முடியாது.

40 சத நிபந்தனையை அமுலுக்குக் கொணர்ந்தால், மார்க்ஸிய சக்திகள், தொழிற் சங்கங்களில் ஆதிக்கம் பெறுமென்று ஒரு தொழிற் சங்கத் தலைவர் பயப்படுவதாகத் தெரிகிறது. ஒரு தொழிலில் பல போட்டிச் சங்கங்கள் கிளம்பி, தொழிலாளரின் ஒற்றுமையையும் தொழில் அமைதியையும் குலைப்பது பொது மக்களுக்குப் பெரும் ஆபத்தாகும். தொழிலாளர் தேசபக்தியுள்ளவர்கள், அவர்கள் மீது நம்பிக்கை வைத்து, அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு அவர்களது ஒத்துழைப்பையும் பெறத்தக்க புதிய முறைகளைக் கையாண்டால், அவர்களும் பொது நலனுக்கு மாறாக நடக்க மாட்டார்கள். எப்படியும், தொழிற்சங்க விஷயமாக இப்போதுள்ள மோசமான நிலையை மாற்ற உதவி மந்திரி கூறியுள்ள யோசனை

## 'கலைகளை வளர்க்கவேண்டும்'

பருத்தித்துறை, வியா

தமிழிசை புராதனமும் புகழும் வாய்ந்தது. தமிழையும் தமிழிசை முதலான கலைகளையும் வளர்க்கவேண்டியது நமது கடமையாகும். நமது கலைகள் வளர்வதன் மூலம்தான் நமது இனத்தின் பண்பாடும், நாகரீகமும் மற்றவர்களால் மதிக்கப்படும். சங்கம் வைத்து தமிழ் வளர்த்தகாலத்தை மனதில் கொண்டு நாமும் இசை, கலை மன்றங்களை வைத்து அவற்றை வளர்த்து பண்படைய உயர்ந்த நிலைக்குக் கொண்டுவருவோமாக".

இவ்வாறு புலோலி கிழக்கு தமிழிசைமன்றம் நடாத்திய விழாவிற்குத் தலைமை வகித்த வடமராட்சிப்பகுதிக் காரியாதிகாரி திரு. ஜே. டி. ஆர்னல்ட் தமது தலைமையுரையில் கூறினார்.

தமிழிசைமன்றத் தலைவர் திரு. க. சந்திரசேகரம். திரு. கே. ரி. இராசசிங்கம் முதலானோர் உரையாற்றினர்.

மன்ற மாணவிகளது இசை நிகழ்ச்சிகளுடன் செல்விகள் இளவேனி, குமுதம் ஆகியோரின் நடன நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

---

பெரிதும் உதவுமென்றும் புதிய சட்டம் சீக்கிரம் நிறைவேற்றப்படுமென்றும் நம்புகின்றோம்.

—

## 'கடன் உதவிகள்'

வெளிநாடுகளிடமிருந்து இலங்கை முதலிய நாடுகள் பெறும் கடன் உதவிகளிலே வட்டிவிகிதங்களும் தவணைகள் எவ்வளவு காலத்தில் செலுத்தப்பட வேண்டுமென்ற நிபந்தனைகளும் மிக முக்கியமாகும். இவ்விஷயத்தைப்பற்றி காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில், இந்தியப் பிரதமர் குறிப்பிட்டு, வர்த்தகமுறையில் வட்டிக்குக் கடன் கொடுப்பது உதவியாகாதென்றும், வட்டியில்லாமலோ; அல்லது மிகக்குறைந்த விகித வட்டிக்கோ தான் கடன் உதவி அளிக்கவேண்டுமென்றும் நீண்டகால தவணைவேண்டுமென்றும் சரியாக வற்புறுத்தினர்.

பல நூற்றாண்டுகளாக ஆசிய ஆபிரிக்க நாடுகள் மேற்கத்திய வல்லரசுகளால் சுரண்டப்பட்டு வந்துள்ளன. விடுதலைபெற்ற மக்களுக்கு அவர்களது பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்ளப் போதிய உதவிகளைத் தாராளமாக அளிக்க வேண்டியது, இதுவரை சுரண்டிய நாடுகளின் கடமை.

அதிக வட்டிக்குக் கடன் வாங்கி, புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பின், வட்டியையும், கடன் தவணையையும் திருப்பித் தருவது மிகவும் சங்கடமாகி மேலும் மேலும் கடன்பட்டு, மீளாத பொருளாதார அடிமைத்தனத்துக்கு உட்பட வேண்டி ஏற்படும். அது நிச்சயம் உதவியாகாது. வட்டியில்லாமலோ அல்லது மிகவும் குறைந்த வட்டிக்கோ, கடன் கிடைப்பதாயிருந்தாலே தான் அதைப் பெற்று ......ள்ள தொழில்களை ஆரம்பித்து வெற்றியுடன் நடத்த முடியும்.

# கசநோய்க் கிருமிகள்

— வைத்தியர் பரிபூரணநந்தர் —

**இவ்வாரம், சுகாதார வாரமாக நாடு பூராவும் கொண்டாடப்படுகிறது. அதையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது. கசநோய் உண்டாக ஏதுவாக இருக்கும் கிருமிகள் பற்றி இக் கட்டுரையில் சுருக்கமாக, ஆனால் தெளிவாக கூறப்பட்டுள்ளது.**

கசநோயை உண்டாக்கும் கிருமிகள் மிக மோசமான ஆபத்தை நமக்கு மிகவிரைவில் ஏற்படுத்திவிடுகிறது. இக்கிருமிகள் கண்ணுக்குத் தெரியாத மிகச் சிறியவை. கசநோயுடையவர்களிடமிருந்தும் கசக்கிருமிகள் உள்ள சில மாடுகளிடமிருந்தும் நமக்கு இக்கிருமிகள் தொற்ற ஏதுவாகின்றன. இந்த நோயுள்ள பசுவின் பால மூலமும் இக்கிருமிகள் சிறுவர்களிடம் தொற்றிக் கொள்கின்றன. ஆனால் பாலை நன்கு கொதிக்க காய்ச்சிக் கொண்டால் கசக்கிருமிகள் இறந்துவிடும். கசக் கிருமிகளை ஆராய்ந்த நிபுணர்கள் இந்த பசிலஸ் என்ற கிருமி கசக் கிருமிகள் 15 வயது வரை உள்ள சிறுவர்களின் நுரை ஈரல்களில் காணக் கிடந்தவையும் காலஞ் செல்லச் செல்ல இவை மனித கசக்கிருமிகளாய் உருமாறுவதையும் அவதானித்தனர். இக் கசக் கிருமிகள் கிராமவாசிகளிடத்திலும் பார்க்க பட்டினவாசிகளிடத்தில் அதிகம் காணப்படுவதாயும் பரிசோதனையில் கண்டனர். கசநோயுடையவர்கள் கண்ட இடங்களில் எல்லாம் சளியைத் துப்பிவிட அது காற்றோடு கிளம்பி, நாம் உள் இழுக்கும் சுவாசத்தோடு கலந்து நமது நுரை ஈரலைப் போய்ச்சேர்ந்து விடுகின்றன. கசநோயாளரின் சளியில் ஒரு சிறுதுளி காற்றில் கலந்து நூற்றுக் கணக்கானவர்களிடம் பலவிதமாக போய்ச்சேருகின்றன. நோயாளர்கள் குளிக்கும் கேணிகளில் மற்றவர்கள் குளித்தல், பாத்திரங்களை இருபகுதியாரும் எச்சிற்படுத்தி உபயோகித்தல், துணிகளை மாறிக்கலந்து கட்டுதல் ஒரே படுக்கையில் கலந்து படுத்துக்கொள்ளுதல் இவைகள்யாவும் ஆபத்தானவை.

நம்மிடம் புகுந்துகொண்ட கசக்கிருமிகள் பத்து நாளுகப் பெருகி நமது நுரை ஈரலில் குடிகொள்ளும் இவற்றை எதிர்க்க ஆண்டவன் நம்மிடம் சில எதிர்க் கிருமிகளை உற்பத்தி செய்துள்ளார். நல்ல இரத்தம் படைத்தவர்களிடம் இக் கிருமிகள் கூட்டமாக நின்று வெளியிலிருந்துவந்த கசக்கிருமிகளை சுற்றிவளைத்து கொண்டு தலையெடுக்காமல் செய்கின்றன. இக்கிருமிகட்கு "லியூகோசைற்ஸ்" என்று பெயர். சில சமயங்களில் கசக்கிருமிகள் வெற்றிகொள்கின்றன.

நல்ல சூரிய வெப்பத்தில் கசக்கிருமிகள் இறந்துவிடுகின்றன. இவை 82 பாகைகளுக் குறைந்த குளிரில் உயிர் வாழ முடியாது. இதேபோல் 15 பாகை உஷ்ணத்திலும் உயிர் வாழமுடியாது இறந்துவிடுகின்றன. இருட்டும் சதுப்பு நிலமும் இக்கிருமிகட்கு உவப்பானவை. நமது நுரை ஈரலை பன்னிரண்டாய் பிரித்து ஒரு பங்கு மட்டும் கசக்கிருமிகளால் தீண்டப்படாதிருந்தாலும் கூட நாம் சிகிச்சையினுல் உயிர் தப்பலாம்.

—

## வருடாந்த உற்சவம்

உடுப்பிட்டி, வெள்ளி

கரவெட்டிமேற்கு மத்தொனி முங்கோடை முருகன் ஆலய வருடாந்த உற்சவ திருவிழா நாளை சனிக்கிழமை ஆரம்பமாகிறது. ஆனி உத்தரத் திருநாளன்று தீர்த்தோற்சவம் நடைபெறும்.

தொடர்ந்து பத்துநாள் உற்சவமும் வழமைபோல் நடை..................... சபைத்தலைவர் அறிவித்துள்ளார்.

## தோட்டப்பாட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### போதனுமொழி

தேசிய கல்விக்கமிஷன், தேசிய ஒற்றுமைக்காக இங்குள்ள பாடசாலைகளில் சிங்களம் போதனுமொழியாக இருக்க வேண்டுமென தனது அறிக்கையில் செய்துள்ள சிபார்சு குறித்து இங்குள்ளவர்கள் பெரிதும் கவலைகொண்டுள்ளார்கள்; கமிஷனிலுள்ள இரு அங்கத்தவர்கள் அதை மறுத்துள்ளார்கள், ஐ. நா.வின் 1959-ம் வருடம் நவம்பர் 20-ம் திகதிய குழந்தைகள் சாசனத்தின் பிரகாரம் இது முரணானது அத்துடன் சர்வதேசத் தொழிலாளர் இயக்கம் ஏற்றுக் கொண்டுள்ள கொள்கைகளுக்கும் இது முரணானது.

தாய்மொழி மூலம் கல்வி பெறுவதே இலகுவானது தேசிய ஒற்றுமைக்கு சிங்களம் கற்பிக்கப்படவேண்டுமென்பதை ஏற்றுக்கொள்ளும் அதே நேரத்தில் தாய்மொழி என்ற முறையில் தமிழ் பாடசாலைகளில் தமிழ் போதனுமொழியாக இருக்கவேண்டுமென நான் வலியுறுத்திக்கூற விரும்புகின்றேன்.

இவையெல்லாம் எனது சமூகத்தவர்களிடமிருந்துதிரட்டப்பட்ட அபிப்பிராயங்களே இவைபற்றி தேசிய கல்விக் கமிஷனிடமும் தெரிவித்திருந்தோம். இவ்வித அவசிய தேவைகளை தாங்கள் நன்கு உணர்ந்து கல்வி பற்றிய வெள்ளையறிக்கையில் செய்யப்படவிருக்கும் திருத்தத்தில் இவற்றுக்கும் இடமளிப்பீர்களெனவும் 1965—66-ம் வருடத்துக்கான பட்ஜட்டில் இவற்றுக்கான நிதி ஒதுக்க நடவடிக்கை எடுப்பீர்களெனவும் எதிர்பார்க்கின்றோம்.

---

(5-ம் கலத் தொடர்ச்சி)

றியதை நினைக்கையில் மகிழ்ச்சியாகவும் பெருமையாகவுமுள்ளது.

* * *

ஐம்பத்திநான்கு வருடகாலம் தாம்பத்திய வாழ்க்கை நடத்தி, தமது 55-வது வயதிலே சுமங்கலியாக கணவனின் மடியில் தலைவைத்து "சிவா", "முருகா" என்று சொல்லி மறைவதென்றால் அது எவ்வளவு பெரிய பாக்கியம்! அந்தப் புண்ணியவதி யார் தெரியுமா? வித்வான் இரத்னேச்வரையரின் அருமைத் துணைவியாரான மீனாட்சி அம்மையார்தான்.

யாழ்ப்பாணத்தில் பத்து நாட்களுக்குமுன் மறைந்த அம்மை, பர்மா, இந்தியா முதலிய நாடுகளிலும் வாழ்விலும் தாழ்விலும் தமக்கு உற்றதுணையாக இருந்ததாயும் அவரைப்பிரிந்து அய்யர் அவர்கள் தள்ளாத வயதிலே உணர்ச்சியுடன் கூறும் கதைகள் உள்ளத்தை உருக்குகின்றன.

தன் நாயகனே தஞ்சமென்று இருந்த அந்த உத்தம அம்மையாரின் ஆத்மா சாந்தி அடைக!

* * *

உருமூன்றாய் உணர்வின்கண் ஒன்றான ஓங்கார மெய்ப்பொருளை உடம்பினுள்ளால், கருவின்ற வெங்களவை யறிவான்தனைக் காலைத்தன் கழலடியால் காய்ந்து மாணிக், அருளின்ற ஆரமுதை அமரர்கோனை யன்றிபெம் பெருமான் என்பார்க்கென்றும், திருவின்ற தென்பரம்பைக் குடியின்மேய திருவாலம் பொழிலானைச் சிந்திநெஞ்சே,
— அப்பர்சுவாமிகள்

## ஐயாறன் எழுதுவது

சினிமாப் படங்களுக்கு மிகவும் கவர்ச்சியளிப்பது ஆண்-பெண் இரட்டைக்குரல் பாடல்கள். பாட்டுக் கச்சேரிகளிலும் இரு ஆண்கள் (பிரதர்ஸ்), இரு பெண்கள் சேர்ந்து பாடுவதைக் கேட்கின்றோம். ஆனால் மேடைகளில் ஆணும் பெண்ணும் சேர்ந்து கச்சேரிகள் செய்வதையோ ரேடியோவில் சேர்ந்து கச்சேரி செய்வதையோ சாதாரணமாகக் கேட்பதில்லை.

இந்தியாவில் ஆகாசவாணியும் இதுவரை செய்யாத இந்தக் காரியத்தை இலங்கை வானொலி செய்துள்ளதாயும் மகாராஜபுரம் சந்தானமும் அவர் துணைவியாரும் சேர்ந்து சென்றமாதம் இலங்கை வானொலியில் பாடியது மிக இனிமையாக இருந்ததாயும் அதைத்தாம் ரிகார்ட் செய்து வைத்துள்ளதாயும், இவ்வித கச்சேரிகளை இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவிலும் நடத்துவது மிக நல்லதென்றும் ஓர் அன்பர் தெரிவித்தார்.

இரு நாட்களுக்கு முன் ஓர் அன்பர் வீட்டிலே சந்தானம் தம்பதிகள் சில பாட்டுகளைச் சேர்ந்து பாடியதைக் கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் தனியாகப் பாடுவதைவிட துணைவியுடன் சேர்ந்து உற்சாகத்துடன் பாடியது அதிக இனிமையாக இருந்தது. சங்கீத தம்பதிகள் இப்படி அமைவது மிக அபூர்வமல்லவா! இவ்விதமான ஆண்-பெண் இரட்டைக்குரல் சங்கீதக் கச்சேரியை முதல் முதலாக ஒலிபரப்பி நல்ல முன்மாதிரி காட்டிய இலங்கை வானொலியைப்பாராட்ட வேண்டும்.

* * *

சென்னை தமிழரசுக்கழகத் தலைவரான ம. பொ. சி.க்கு வருகிற சனிக்கிழமை அறுபதாவது ஆண்டு பிறக்கின்றதாம். அவர் நீடுழி வாழ்க!

முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்பாக "தென்னாட்டுத் திலகர்" டாக்டர் வரதராஜுலுநாயுடு நடத்திய "தமிழ்நாடு" எனும் தினசரிப்பத்திரிகையில் கம்பாஸிட்டராக மாதம் பதினொருபாய் சம்பளத்தில் இருந்தவர். அந்தச் சம்பளமும் ஒழுங்காக வராது. இரு மாதங்கள் சம்பளம் கொடுக்காததால் அங்கு ஸ்டிரைக் நடந்தது. பின்னர் பத்திரிகையை விட்டுவிட்டு தேச விடுதலைப் போராட்டத்தில் இறங்கி பன்முறை சிறைசென்றிருக்கிறார். அஞ்சாநெஞ்சு படைத்த வீரர் அவர்.

பள்ளிக்கூடத்தில் இரண்டாவது வகுப்பு வரையிலேயே படித்தவராம். என்றாலும் சென்னை நகரசபையில் கல்விக்கமிட்டித் தலைவராகவும் பல்கலைக்கழக செனட் அங்கத்தவராயும், சென்னை மாவட்ட நூல்நிலைக் குழுத்தலைவராயும், தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகவும் சென்னைக் கார்ப்பரேஷனில் ஆல்டர்மெனாகவும் மேல்சபை உறுப்பினராகவும் இருந்திருக்கின்றார்.

'சிலம்புச்செல்வர்' என்று புகழ்பெற்ற ம. பொ. சி. சென்ற வாரம் தமிழகத்திலே திருக்குறள் மகாநாட்டில் செய்த 'கர்ஜனை'யை ரேடியோவில் கேட்டேன். மரக்கட்டையும்கூட உணர்ச்சிபெற்று எழுந்துவிடக் கூடியதாக இருந்தது அவர் பேச்சு!

சமீபத்தில் திருத்தணிகைக்குச் சென்றிருந்தேனல்லவா? அந்தப்பதியை தமிழர்களுக்கு மீட்டுக் கொடுத்த அந்த வீரரைப்பற்றிய நினைப்பே அங்கு எனக்கு வந்தது. அந்த நன்றியைத் தமிழர் என்றென்றும் மறக்க முடியுமா? அவருடன் சேர்ந்து "தமிழ்நாடு" பேப்பரில் அப்போது தொண்டாற்

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காமன்வெல்த் சமாதானக் குழுவுக்கு ரஷ்யாவும் கைவிரிப்பு

## "வடவியட்னும் வியட்காங்கிகளுடன் மட்டுமே தொடர்பு கொள்ளவேண்டும்"

### அமெரிக்கா, தென் வியட்னமுக்கு சமாதானக் குழுசெல்லும்

மாஸ்கோ, ஜூன் 24

வியட்னும் சம்பந்தமான காமன்வெல்த் சமாதானக் குழுவைச் சந்திக்க முடியாது என ரஷ்யாவும் இப்போது கைவிரித்துவிட்டது. இக்குழுவைச் சந்திக்கத் தமக்கு அதிகாரம் கிடையாது என்றும், பிரச்னையில் சம்பந்தப்பட்ட வடவியட்னுமுடனும், வியட்காங்கிகளுடனும்தான் காமன்வெல்த் கோஷ்டி தொடர்பு கொள்ள வேண்டுமென்றும் ரஷ்யா கூறிவிட்டது.

மாஸ்கோவிலுள்ள கானு நைஜீரியா ஆகிய நாடுகளின் தூதர்கள் சமாதானக் குழுவைச் சந்திக்குமாறு ரஷ்ய பிரதமரிடம் கூறியபோது திரு. கோஸிஜின் இதற்கு மறுப்புத் தெரிவித்ததுடன் வியட்னுமில் அமெரிக்கக் குறுக்கீட்டை நிறுத்துமாறு காமன்வெல்த் நாடுகள் வாஷிங்டனைக் கோர வேண்டுமெனக் கூறியதாயும் டாஸ் செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

பீகிங்கும், ஹானேயும் காமன்வெல்த் குழுவை வரவேற்க முடியாது என அறிவித்ததைத் தொடர்ந்து ரஷ்யாவின் மறுப்பும் மாஸ்கோவிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகரிடம் வழங்கப்பட்டிருக்கிறது

### அமெரிக்கா தென்-வியட்னும் வரவேற்பு

ஆனால் தூதுகோஷ்டியைச் சந்திக்கத் தயார் என அமெரிக்காவும் தென்வியட்னுமும் அறிவித்திருக்கின்றன.

எங்கெல்லாம் செல்ல முடியுமோ அங்கெல்லாம் சமாதானக்குழு தீர்மானித்திருப்பதாய் லண்டனில் அறிவிக்கப்பட்டது.

அடுத்த மாதம் 7-ம் திகதி ஜெனிவாவில் யுதாண்டைச் சந்திக்க அமைதிக்குழு தீர்மானித்திருக்கிறது.

வியட்னுமில ராணுவவெற்றி பெறுவதே வடவியட்னுமின் லட்சியம் என்றும் சமாதானப் பேச்சுக்கு பல நாடுகள் மேற்கொண்ட முயற்சியை அது நிராகரித்துவிட்டது என்றும் அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்க் கூறியிருக்கிறார். வடவியட்னுமை விட சீனுதான் சமாதானத்தை அதிகமாக எதிர்க்கிறதென்றும் ஆசியாவில் ஆதிக்கம் செலுத்துவதே சீனுவின் நோக்கம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்புமந்திரி திரு. மக்னமாரா விடுத்த ஒரு அறிக்கையில் இக்கட்டத்தில் வியட்னுமில் யுத்தநிறுத்தம் செய்வது அமெரிக்காவையும் தென்வியட்னுமையும் பாதிக்கும் எனக் கூறியிருக்கிறார்;

தென்வியட்னுமின் பாதுகாப்பும் சுதந்திரத்துக்கான உத்தரவாதமும் அமெரிக்காவுக்கு முக்கியம் என்றும் அவர் கூறியுள்ளார்.

### தாக்குதல்கள்

வடவியட்னுமின் சீன எல்லையிலிருந்து 130 கிலோமீட்டர் வடமேற்கே அமெரிக்க விமானங்கள் நேற்று மீண்டும் தாக்குதல் நடத்தின. ஒரு விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டதாயும் விமானி மீட்கப்பட்டார் என்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால் 8 அமெரிக்க விமானங்கள் சுடப்பட்டதால் ஹானேய் அறிவித்தது.

அதேசமயம் நேற்று அரசாங்கத் துருப்புகள் நடத்திய இரு தாக்குதல்களில் 104 வியட்காங்கியர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

வியட்காங்கியர் திரண்டிருப்பதாகக் கூறப்படும் ஓரிடத்தில் ஹெலிகோப்டர்கள் மூலம் தென்வியட்னும் துருப்புகள் நேற்று இறக்கப்பட்டன.

ஆளில்லா அமெரிக்க விமானம் ஒன்றை வடவியட்னும் சுட்டுவீழ்த்தியதாகவும், வடவியட்னும் இத்தகைய விமானம் ஒன்றைச் சுட்டுவீழ்த்தியது இதுவே முதல் தடவை என்றும் பீகிங் செய்தி ஒன்று கூறுகிறது.

# திரு. ஆர்னுல்ட்ஸ்மித் காமன்வெல்த் தலைமைக் காரியதரிசி

லண்டன், ஜூன் 24

கனடாவைச்சேர்ந்த திரு. ஆர்னல்ட்ஸ்மித்தை காமன்வெல்த் ஸ்தாபனத்தின் முதலாவது பொதுக்காரியதரிசியாக லண்டன் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு ஏகமனதாக அங்கீகரித்தது

50 வயதான திரு. ஸ்மித் விரைவில் தமது பதவிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுவார். 5 ஆண்டுக்காலம் அவர் காமன்வெல்த் ஸ்தல தலைமைக் காரியதரிசி பதவியை வகிப்பார்.

திரு, ஸ்மித் கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் வெளிநாட்டு சேவையில் பதவிவகித்திருக்கிறார். ஐ. நா. வில் கனேடிய தூதுகோஷ்டியின் ஆலோசகராகவும் அவர் பதவி வகித்தார்.

# திருட்டுநாரைக்கு ஆயுள்தண்டனை

பெர்லின், ஜூன் 28

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில கிரிமன் என்னுமிடத்தில் உள்ள ஒரு சிறிய மிருகக்காட்சிச்சாலையின் காவலாளி ஒருவன் திருடியதற்காகவும், தனது சகாவைக் கொலைசெய்ததற்காகவும் ஒரு நாரைக்கு அண்மையில் தண்டனை விதித்தான்

அந்த மிருகக்காட்சிச்சாலையிலுள்ள ஒரு நாரையிடமிருந்து இலவசமாக உணவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு காட்டுநாரை தினசரி இம்மிருகக்காட்சிச்சாலைக்கு பறந்துவருவதுண்டு. ஒருநாள் இருநாரைகளுக்குமிடையே ஒருகவளம் உணவுக்காக கடுமையான சண்டை ஏற்பட்டுவிட்டது. நாரைமிருகக்காட்சி சாலையிலுள்ள நாரையைத் தாக்கிக் கொன்றுவிட்டது.

இத்திருடன் அடுத்தநாளும் உணவைத் திருட வந்தபோது காவற்காரன் கையில் சிக்கிக் கொண்டான், உடனே நாரையின் சிறகுகள் வெட்டப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, மிருகக்காட்சிச் சாலையிலுள்ள ஒருகூண்டில் அடைக்கப்பட்டது.

# சீனுவில் கம்யூனிஸ்ட் ஆட்சி ஒழிய விரும்புகிருர்களாம்

பெர்லின், ஜூன் 24

சீனத் தலைவர்கள் கடைப்பிடிக்கும் சிக்கன நடவடிக்கைகளில் மக்கள் அலுப்புக் கொண்டு விட்டார்கள், அங்கு சென்று திரும்பிய ஒரு கம்யூனிஸ்ட் பிரயாணி கூறியிருக்கிறார்.

கிராமங்களிலும், நகரங்களிலும் மக்கள் இன்னும் எவ்வளவு நாளைக்கு இக கஷ்டங்கள் நீடிக்கும் எனக் கேட்க ஆரம்பித்து விட்டதாகக் கூறினர்.

சீனுவின் பல பகுதிகளிலுள்ள கம்யூன்களில் ஜோஸ்யர்கள் முளைத்துள்ளனர் என்றும், மாவோதுங்கின் ஆட்சி இன்னும் 1095 நாட்களுக்கு மட்டுமே நீடிக்கும் என ஒரு ஜோஸ்யர் கூறியதாயும் அவர் மேலும் தெரிவித்தார்.

"மக்களின் முணுமுணுப்பு காரணமாக ஆட்சியாளர்கள் கம்யூன்களுக்கு உள்ளேயும், வெளியேயும் மக்களின் அன்றாட நடவடிக்கைகளைப் பாதிக்கும் கட்டுப்பாடுகளை ஓரளவு தளர்த்தியுள்ளனர். எனினும் உணவு விலை இன்னும் அதிகமாகத்தான் உள்ளன

ரேஷன், ஆண்டுக்கு 5 அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. துணி விலைகளும் அதிகம், சிகரெட்டுகள் அரிதாகத்தான் கிடைக்கின்றன.

# "அல்ஜியர்ஸ் மகாநாட்டை ஒத்திவைத்தே தீரவேண்டும்"

## 13 ஆசிய-ஆபிரிக்க தலைவர்கள்மீண்டும்வலியுறுத்து

### உச்சித் தலைவர்கள் மகாநாடு அரை குறையாக நடைபெறுமா?

அல்ஜியர்ஸ், ஜூலை 24

அல்ஜியர்ஸில் இன்று நடைபெற விருந்த ஆசிய ஆபிரிக்க வெளிநாட்டு மந்திரிகள் மகாநாடு நாளை வரை ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது என அல்ஜீரிய வெளிநாட்டு மந்திரி அறிவித்திருக்கிறார்.

இதற்கிடையில் ஆசிய ஆபிரிக்க உச்சித் தலைவர்கள் மகாநாடு பற்றித தீர்மானிக்க வெளிநாட்டு மந்திரிகளுக்குத்தகுதி கிடையாது என லண்டனில் கூடியுள்ள காமன் வெல்த்தின் ஆசிய ஆபிரிக்க தலைவர்கள் அல்ஜீரியாவிடம் தெரிவித்திருக்கிறார்கள்,

அல்ஜீயர்ஸ் மகாநாட்டில் கலந்து கொள்வதில்லை என்ற முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என பாகிஸ்தான் கேட்டுக் கொண்டதற்கிணங்க காமன் வெல்த்தின் ஆசிய ஆபிரிக்க தலைவர்கள் நேற்று இரு முறை கூட்டம் நடத்தினார்கள், எனினும் தங்கள் முன்னைய முடிவை மாற்றும் அவசியம் ஏற்படவில்லை என அவர்கள் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது, ஆசிய-ஆபிரிக்க ஒருமைப்பாட்டைக் கருதி காதகமான ஒரு தருணம் வரும்வரை மகாநாட்டை ஒத்திவைக்க வேண்டுமென பிரதமர்கள் கூறியிருக்கிறார்கள்,

ஆசிய-ஆபிரிக்க காமன்வெல்த் நாடுகளின் சார்பாக ஒரு பிரதிநிதியை வெளிநாட்டு மந்திரிகள் மகாநாட்டுக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்ற திரு பூட்டோவின் யோசனையையும் அவர்கள் நிராகரித்து விட்டார்கள்.

எப்படியாவது உச்சித் தலைவர்களின் மகாநாட்டில் காமன் வெல்த் ஆசிய ஆபிரிக்க நாடுகளைக் கலந்து கொள்ளச்செய்ய பாகிஸ்தானின் முயற்சி தோல்வியடைந்து விட்டதாகக் கருதப்படுகிறது.

லண்டனிலிருந்து அல்ஜியர்ஸ் புறப்படவிருந்த இந்திய வெளிநாட்டுமந்திரி திரு சுவர்ணசிங், தமது பிரயாணத்தை ரத்துச்செய்து விட்டார், பிரதமர் சாஸ்திரி டில்லி திரும்பும் போது அவருடன் திரு சுவர்ணசிங்கும் வருவார் என அறிவிக்கப்பட்டிருக்கிறது,

அல்ஜியர்ஸில் நிலைமை பத்திரமற்றிருப்பதாக பல பிரதிநிதிகள் கருதுவதாய்த் தெரிகிறது. எனினும் உச்சிமகாநாட்டை நடத்த அல்ஜீரிய புரட்சி அரசாங்கம் இறுதி முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறதாம்.

65 நாடுகளின் வெளிநாட்டு மந்திரிகளில் சுமார் 31 நாடுகளின் வெளி மந்திரிகள் மட்டுமே தற்பொழுது அங்கு வந்திருப்பதாகக் கூறப்படுகிறது,

சீன வெளிநாட்டு மந்திரி மார்ஷல் சென்யீ நேற்று புரட்சி அரசாங்கத் தலைவர் கானல் பொமிதியனைச் சந்தித்துப் பேசினார்;

அல்ஜீரியாவில் மீண்டும் பென் பெல்லாவுக்கு ஆதரவான போராட்டங்கள் நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது, இதைத்தொடர்ந்து துருப்புக்கள் துப்பாக்கிப்பிரயோகம் நடத்தினர்கள்.

# சர்வதேச நேரு பரிசு

## உரியவரைத் தேர்ந்தெடுக்க குழு நியமனம்

புதுடில்லி, ஜூன் 28

சர்வதேச நல்லுறவுக்கான நேரு பரிசை யாருக்கு அளிப்பது என்பது பற்றிப் பரிசீலிக்க 7 பேரைக்கொண்ட ஒரு குழுவை அரசாங்கம் நியமித்திருக்கிறது.

உப ஜனதிபதி டாக்டர் ஸகீர் ஹுஸெய்ன், தலைமை நீதிபதி கஜேந்திரகட்சர் உட்பட 7 பேர் இக்குழுவில் இருக்கிறார்கள். மற்றும் 5 பேர் 8 ஆண்டுகளுக்குக் குழுவில் அங்கம்வகிப்பார்கள்,

பரிசுத் தொகையான 1 லட்சம் ரூபாவை வெளிநாட்டுச் செலாவணியாக மாற்றும் வழியில் ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது, பரிசு பெறுபவருக்குப் பதக்கமும் வழங்கப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் நேரு பிறந்த நவம்பர் 14ம் தேதி இப்பரிசும், பதக்கமும் வழங்கப்படும்.

# சீனர்களின் சினிமாபைத்தியம்: ஐ. நா. புள்ளி விபரம்

நியூயோர்க், ஜூன் 24

மக்கள் தொகையிலும் திரைப்படங்கள் உற்பத்தியிலும் இந்தியா உலகில் 2-வது ஸ்தானம் வகிக்கிறதென்றும் ஆண்டு ஒன்றுக்கு 100கோடிப் பேர் திரைப்படம் பார்க்கின்றனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

பல அம்சங்களில் உலகில் முதலிடம் வகிக்கும் அமெரிக்கா ஜனத்தொகையில் 4-வது ஸ்தானத்தையே வகிக்கிறது.

ஐ. நா. புள்ளிவிபரங்களில் இந்த விபரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரைப்பட உற்பத்தியில் எண்ணிக்கையைப் பொறுத்தவரை இந்தியா 2-வது ஸ்தானத்தை வகிக்கிறதென்றும், ஆனால் தரத்தைப் பொறுத்தவரை இந்தியப் படங்கள் உயர்வானவை அல்ல என்றும் அதில் மேலும் கூறப்பட்டிருக்கிறது.

திரைப்பட உற்பத்தியில் ஜப்பான் முதலிடம் வகிக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு ஜப்பான் 657 படங்களையும் இந்தியா 819 படங்களையும் தயாரிக்கிறது.

திரைப்படம் பார்ப்பதில் சீனர்கள் உலகிலேயே முதலிடம் வகிக்கின்றனர். 1963-ம் ஆண்டில் சினிமா பார்த்த சீனர்களின் எண்ணிக்கை 400 கோடி என்றும், ரஷ்யாவில் 384.9 கோடிப்பேரும், அமெரிக்காவில் 217.6 கோடிப்பேரும், இந்தியாவில் 100 கோடிப்பேரும் சினிமா பார்த்[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வள்ளுவரை பல்வேறு வடிவத்தில் காண்கின்றோம்"

யாழ்ப்பாணம், வெள்ளி

"வள்ளுவரை விபூதி ருத்திராட்சமணிந்த ஒருவரும் முனிவராக மட்டும் நாம் காணவில்லை. அவரை நாம் அவருடைய திறக்குறளிலே ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒவ்வொருவிதமாகக் காண்கிறோம். இன்பத்துப் பாலிலே இருபத்தைந்து வயது வாலிபனாக பார்க்கின்றோம், அடுத்தகணம் பொருட் பாலிலே அவர் ஓர் அரசியல்வாதியாக அமைச்சராக ஒற்றராகவந்து நம்மோடு உரையாடுகிறார். மறுகணம் அறத்துப்பாலிலே மக்களோடு மகிழ்ந்து மனையறம் காக்கும் இல்லறத்தானாக நம்மை மகிழ்விக்கிறார்" என்று புலவர் தமிழ்மாறன் தென்மராட்சி இளந் தமிழர் மன்றத்தாரால் கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலையில் நடாத்தப்பட்ட வள்ளுவர் விழாவின்போது பேசுகையில் குறிப்பிட்டார்.

புலவர் ம. பார்வதிநாதசிவம் பேசுகையில் உலகத்திலே நம் தமிழகத்தின் பெருமை எல்லோருக்கும் பொருத்தமான வள்ளுவன் குறளால் உயர்ந்தது; செழித்தது; ஏற்றம் பெற்றது என்றார்.

இளந்தமிழர்மன்றக் காப்பாளரும் சாவகச்சேரித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருமாகிய திரு. வ. நவரத்தினம் உரையாற்றுகையில் இதுபோன்ற விழாக்களை எடுத்து எம்மை உற்சாகப்படுத்தும் இளைஞர்களின் சேவை ஒவ்வொரு ஊருக்கும் அவசியம் தேவை. என்றார்.

ஆசிரியர்கள் திரு. சி. சரவணமுத்து, திரு. பொன் சபாபதி, திரு. க. நடராசா, திரு. க. சுப்பிரமணியம், திரு. இ. வேலாயுதம், செல்வன் சுந்தரலிங்கம் ஆகியோர் பேசினர்.

திரு. ஆ. வே. கந்தையா தமது முடிவில், அறிஞர்களின் பொன்மொழியும் சமய உணர்வும் மதியம் திரும்பியவர்களுக்குத்தான் வேண்டும் என்று பல இளைஞர்கள் எண்ணுகின்றனர். இந்த நிலை மாறினால்தான் எம் தமிழ்ச் சமுதாயம் சீர்திருந்தும் என்றார்

திருமதி மகேஸ்வரி கமலேஸ்வரனும் மாணவிகளும் இன்னிசை கச்சேரியுடன் விழா முற்றுப்பெற்றது.

## சித்த பட்டதாரிகள் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சித்த டி. ஐ. எம். எஸ். பட்டதாரிகளின் முதலாவது பொதுக்கூட்டம் ஜூன் 27ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் சங்கத்தலைவர் டாக்டர் எஸ். காராளசிங்கத்தின் தலைமையில் கொழும்பிலுள்ள ஆயுர்வேதக் கல்லூரியில் நடைபெறும். இக்கூட்டத்தில் பல டாக்டர்கள் விரிவுரை நிகழ்த்துவார்கள்.

## மாணவர்களை அனுமதித்தல்

கொழும்பு, வியா.

கொழும்பில் பிரபல பிரதம பாடசாலைகளில் மாணவர்களை வட்டார அடிப்படையில் சேர்ப்பதென்ற விதியை ஒழித்து விடுவதற்கு கல்வி இலாகா ஆலோசனை செய்துவருகிறது அடுத்த வருடம் மாணவர்களை பாடசாலைகளில் அனுமதிப்பதற்கான புதிய திட்டம் ஒன்றை சமர்ப்பிக்கும்படி கல்வி மந்திரி, வித்தியாதிபதியைக் கேட்டுள்ளார். இது விஷயமாக சில கல்லூரி அதிபர்களை கல்வி அமைச்சு அழைத்து அவர்களின் யோசனையையும் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம், வெள்ளி

இளவாலையைச் சேர்ந்த பேதுரு செல்வத்தி என்பவளுக்கு புடையன் பாம்பு தீண்டியதால் மயக்கமுற்ற நிலையில் கொட்டடி விஷக்கடி வைத்தியர் திரு. சிற்றம்பலத்திடம் கொண்டுவரப்பட்டு அவரது சிகிச்சையால் மயக்கநிலை தெளிந்து குணமடைந்துவருகிறார்.

## 'மலிவுடிக்கெட்டுகள் வழங்குக'

யாழ்ப்பாணம், வெள்ளி

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவ தினங்களில் மலிவுப் பயணச் சீட்டுக்கள் வழங்கும்படி கூத்தியவத்தை கிராம முன்னேற்றச் சங்கக் காரியதரிசி இலங்கை புகையிரதப்பகுதி அதிகாரிக்கு எழுதிய கடிதத்தில் கேட்டுள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: கந்தசாமி கோவில் ஈழத்திலுள்ள சரித்திரப் பிரசித்திப்பெற்ற ஸ்தானங்களில் ஒன்று. இத் தலத்தில் 26 தினங்கள்வரை உற்சவம் நடக்கும். சில வருடங்களுக்கு முன்பு சில விசேட ஒழுங்குகளை புகையிரதப் பகுதியினர் யாத்திரீகர் களுக்கு செய்திருந்தார்கள். இவ்வழக்கம் தற்பொழுது அனுசரிக்கப் படுவதில்லை. ஆகையால் இதனை இந்த வருடம் நடைமுறைக்கு கொண்டு வரும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்"

இவ்வருடம் உற்சவம் ஜூலை மாதம் 4-ம் திகதி ஆரம்பமாகி ஜூலை 29-ம் திகதியுடன் முடிவடைகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

பம்பலப்பிட்டி, வியாழன்

சாய்ப்புச் சட்டத்தின் கீழ் தற்போது இருந்துவரும் ஆயிரக்கணக்கான சிப்பந்திகள் இனி சம்பள நிர்ணய சபையின் கீழ் கொண்டுவரப்படுவார்கள்.

தொழில் வேலைவாய்ப்பு வீடமைப்பு மந்திரி ஐனுப் முகமது இதற்கான நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். இதனால் தொழிலாளர்கள் நன்மையடைவார்களென அறியப்படுகிறது.


காது வலியா?
உடனடி நிவாரணத்திற்கு
இன்றே
உங்கள் வியாபாரியிடம் வாங்கிப் பாவியுங்கள்!

அருத எண்ணெய்

அருபகாம் பச்சை எனும் தமிழ் மூலிகையும்
வேறு 44 ஆயுர்வேத மூலிகைகளும் சேர்ந்தது.
கண் — தலை — காது — மூக்கு
சம்பந்தப்பட்ட சகல வியாதிகளுக்கு சாலச் சிறந்தது!
—சிறுவர் முதல் பெரியோர்வரை பாவிக்கலாம்—
தயாரிப்பாளர்:
பி. எம். திசாநாயக்க
அருத எண்ணெய் தொழிலகம், கம்பளை. போன்: 454
யாழ்ப்பாணத்திற்கு ஏகவிநியோகஸ்தர்கள்
எஸ். சுப்பிரமணியம் அன் கோம்பனி
58, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(தொலைபேசி: 541, 7068)


# ஏட்டுக் கல்வியுடன் தொழிற் கல்வியும் வேண்டும்

## மகாஜனா கல்லூரி அதிபர் கருத்து

மாவிட்டபுரம், வியாழன்

ஏட்டுக்கல்வியுடன், தொழில்துறைக் கல்வியும் ஒருங்கே இடம் பெறவேண்டுமென்றும், இக்கல்விமுறை இந்நாட்டிலுள்ள சகல பெரிய, சிறிய பாடசாலைகளிலும் பரப்பப்பட வேண்டுமென்றும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. து. ஜெயரத்தினம் நேற்று மாலை நடைபெற்ற கல்லூரி ஸ்தாபகர் தினவிழாவிலும், பரிசளிப்பு விழாவிலும் தமது வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. ஜெயரத்தினம் தமது வருடாந்த நிர்வாக அறிக்கையில் குறிப்பிட்டதாவது:

### புதிய கல்வி வெள்ளையறிக்கை

சென்ற ஆண்டிலே நாம் இங்கு கூடியிருந்தபோது அப்போது பாராளுமன்றம் பரிசீலனை செய்யவிருந்த கல்வி வெள்ளையறிக்கை பற்றி குறிப்பிட்டேன். அதன்பின்னர் எங்கள் நாட்டின் அரசியலில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இப்பொழுது புதிய ஒரு கல்வி வெள்ளையறிக்கை தயார்செய்யப்படுகின்றது. பாடசாலை அமைப்புமுறையிலும் கல்வியின் உள்ளடக்கத்திலும் இப்பொழுது ஆலோசனைசெய்யப்படும் திட்டத்தில் பல மாற்றங்கள் இடம்பெறுமென நாம் எதிர்பார்க்கலாம். ஆக்கவேலையில் ஈடுபட்டு நாட்டின் செல்வத்தைப் பெருக்கக்கூடிய எதிர்கால நற்பிரஜைகளை உருவாக்குவது அதி அத்தியாவசியம். கல்வித்திட்டத்தை உருவாக்குபவர்களும் கல்வி உலகிலே தொடர்புடையவர்களும் இந்த உண்மையை மனதில் பதித்தல்வேண்டும். இதில் வெற்றி பெறவேண்டுமானால் ஏட்டுக் கல்வியுடன் தொழில் துறைக்கல்வியும் ஒருங்கே இடம்பெறுவது முக்கியம். இப்படியான கல்வி இப்பொழுது சில பாடசாலைகளில் இடம் பெற்றுள்ளது. இக்கல்விமுறை எங்கள் நாட்டிலுள்ள எல்லாப் பெரிய சிறிய பாடசாலைகளிலும் பரப்பப்படல் வேண்டுமென்பதை நாம் எதிர்பார்க்கின்றோம். ஆனால் கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண வகுப்புக்குப் பின்னர் இடைமுறிவு இருக்கின்றது. இதனை இயன்ற அளவு விரைவில் நிரப்புதல்வேண்டும். புத்தகப் படிப்பிற்கு உகந்தவரல்லர் எனக் கருதப்படும் மாணவருக்குப் பெரும்பாலுமே தொழில்துறைக் கல்லூரிகள் நிறுவுவது பற்றித் தேசிய ஆணைக்குழு கருத்துத் தெரிவித்துள்ளது. இக்கல்லூரிகள் விரைவில் உருவாவது அத்தியாவசியமென்க. புதிய கல்வித் திட்டத்தில் இந்த ஆலோசனை இடம்பெறுமென்பது எம் நம்பிக்கை. எங்கள் பண்பாட்டுப் பாரம்பரியத்திற்கும், பொருளாதாரத் தேவைக்கும் ஏற்ற ஒரு புதிய கல்வி முறையை உருவாக்குவதற்குப் பெரும் முயற்சிசெய்துவருகின்ற எங்கள் புதிய கல்வி மந்திரியை நாம் பெரிதும் பாராட்டுகிறோம். எங்கள் ஒத்துழைப்பை அவருக்கு நல்குகிறோம்.

### கல்வித்தரம் வீழ்ந்தால் கல்வியால் என்னபயன்?

எங்கள் எதிர்காலத்திற்கு வேண்டிய புத்தம் புதிய கல்வித் திட்டத்தை நாம் உருவாக்கலாம். ஆனால் எங்கள் பாடசாலையிலுள்ள கல்வித்தரம் வீழ்ச்சியடையுமாயின் புதிய கல்வித்திட்டத்தால் யாது பயன்! அப்படியாயின் அக்கல்வித் திட்டம் கருத்தற்றதாகிவிடும். இந்த நிலை ஏற்படலாமென்பது கவலைக்குரியது. கடந்த சில ஆண்டுகளாக இந்த அபாயத்தின் அறிகுறி எல்லோரும் காணக்கூடியவகையில் இருந்துவருகின்றது. இந்த ஆபத்தை [illegible] பது. கல்வித்துறையில் [illegible] புரியும் எமது பெரும்பொறுப்பு. எதிர்காலச் சந்ததியின் நன்மைக்காக நாம் உழைத்தல்வேண்டும். ஆசிரியப் பணி என்பது சிரியோருக்குடைய தேசியப்பணி. இது செவ்வனே நிறைவேற நாம் தளராது உழைத்தல் வேண்டும். எங்கள் சொந்தநலன் ஒன்றுக்கே நாம் முதலிடம் கொடுக்க எள்ளளவேனும் தயங்குதல்கூடாது. கல்வித்தரம் வீழ்ச்சியடைகின்ற இந்தத் துக்கமான நிலையைத் தவிர்க்க மாணவரும் எம்முடன் ஒத்துழைக்க முன்வருவாராக. எங்களுடைய கடந்த தலைமுறையினர் 'கல்லாச களிப்பர் தலையாயர்' என்ற கோட்பாட்டிற்கேற்பக் கல்வி கற்றுவந்தனர். இப்போதைய சந்ததியினர் அப்படிக் கல்வியை விருப்புடன் பெறுவதில்லை. பாடம் கேட்கும்போது பலன்களை அடக்கி மனத்தை ஒருவழிப்படுத்தல்வேண்டும் கவனம் தளர்தலாகாது. கேட்ட பாடத்தை மனத்தில் இருத்தல்வேண்டும். பின்னர் அதனைக் கல்வித்தாகத்துடன் சொந்த முயற்சியால் விருத்தி செய்தல்வேண்டும். இதனை எங்கள் இக்காலச் சந்ததியினர் மறந்துவிடுகின்றனர். கல்வி என்னும் மெல்லிய பயிர் வளரும் இடமென்பதைக் கல்வி நிர்வாகம் உணரல் வேண்டும். அப்பயிர் ஓங்கி வளரப் பாடசாலை உதவுகின்றது. கல்விப்பகுதியும் அதிலுள்ள உத்தியோகத்தரும் இந்த வளர்ச்சியைத் துரிதப்படுத்துதற்கெனவே இருக்கின்றனர். வேண்டிய ஆசிரியரை நியமிப்பதில் தாமதமும், வேண்டிய பொருள்கள் தளபாடங்களை வழங்குவதிலே சுணக்கம், கட்டிடங்களைக் கட்டிக் கொடுப்பதில் காலங்கழிதல் ஆகியவை பாடசாலையை நிலைகுலையச்செய்யும், பள்ளியிற் கேட்டபாடத்தை மாணவர் ஒழுங்காக வீட்டிலே மீட்டுக் கொள்கிறார்களோ என்பதைப் பெற்றோர் கண்ணும் கருத்துடன் மேற்பார்வையிடல் வேண்டும். அத்துடன் ஓய்வு நேரத்தை மாணவர் பயன்தரு முறையிலே செலவுசெய்கின்றனரோ என்பதில் பெற்றோர் சிரத்தை எடுத்து மாணவரை ஊக்கப்படுத்துதல் மிகவும் முக்கியம். கல்வித்தரம் வீழ்ச்சியடையாமல் உச்சநிலையில் இருக்க வேண்டுமானால் கல்வியுடன் தொடர்புடைய எல்லோரும் தத்தம் பங்கைத்தவறாது செய்யக் கடவர்.

### முயற்சியின் முக்கியத்துவம்

எங்கள் முன்னோர் இன்றும் கடல் கடந்து சென்று மலேயா போன்ற இடங்களிலும் கடினமான உழைப்பிற்குப் பெயர் போனவர்களாக இருந்தார், சுதந்திரம் பெற்ற நாட்டு ஆட்சி நிலவிய காலத்துள்ள குறுகிய பாதையிலேயே எங்கள் மாணவர்களும் அவர்களுடைய பெற்றோரும் செல்ல விரும்புகின்றனர், புதிய பரந்த பாதையை

(5-ம் பக்கம் பார்க்க)







பாட்டா
Sunsteps
இலங்கைத் தொழிலாளர்களால் டிசைனிடப்பட்டு தயாரிக்கப்பட்டவை.
GC/174

## விளம்பரம்

### குடத்தனை கிராமச் சபை கேள்விப்பத்திர அறிவித்தல்

**குடத்தனை கரையூர் ரோட்டு வேலை**

மேற்படி ரோட்டு வேலை செய்வதற்கு உள்ளூராட்சிப் பகுதியில் B பிரிவில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்த காரர்களிடமிருந்து குடத்தனைக் கிராமச்சபைத் தலைவரால் 30-6-65 திகதி காலை 10 மணிவரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் 28-6-65 காலை 8-30 மணிதொடக்கம் மு. ப. 12,மணி வரையும் எமது கி. ச, கந்தோரில் கேள்விப் பிணைப்பணம் ரூபா 25/-ம் கேள்விப் பத்திரப் பணம் ரூபா 5/-ம் செலுத்தி அதற்குரிய மாதிரிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டும். பத்திரப்பணம் ரூபா 5/-ம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

வேலை விபரங்களைஎமது கி. ச. கந்தோரிலும், யாழ்ப்பாண உதவி ஸ்தலஸ்தாபன அதிபர் கந்தோரிலும் அறிந்து கொள்ளலாம்.

ஜீ. யோ. மரியாம்பிள்ளை
கி.ச, தலைவர், குடத்தனை. 436

### அறிவித்தல்

**சுத்தமான நல்லெண்ணெய்**

மா.மு. இளையதம்பிச்செட்டியார்
13, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை

கறுவாக்காடு வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, தெகிவளை நுகேகொடை, கொம்பனித் தெரு,தொட்டாஞ்சேனை, உனுப்பிட்டி ஆகிய இடங்களில் பிரபல நல்லெண்ணெய் வியாபாரியாகவிருந்த மா.மு. இளையதம்பிச் செட்டியார் காலமாகி விட்டபடியால், அவருடைய வியாபாரத்தை மேற்குறிப்பிட்ட இடங்களில் நாங்கள் மூடிவிட்டோம். தற்பொழுது எங்கள் வாடிக்கை காரருக்காக 13, முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணையில் அவரின் மனைவியாகிய இ. பெண், பொன்னம்மா ஆகிய நான் திறம்பட நடத்தி வருகிறேன். உடலுக்கும், முளைக்கும், கண்ணுக்கும் குளிர்ச்சியூட்டத்தக்கதாக இளநீர் விட்டு பாகம் செய்யப்பட்ட சுத்தமான நல்லெண்ணெயை குறிப்பிட்ட காலத்தில் எனது வாடிக்கை காரர்கள் பெற்றுக் கொள்ளலாம். 434

இ. பொன்னம்மா.


### புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

கட்டுவன்சந்தி மத்திய மயிலிட்டி ஐக்கிய பண்டசாலையின் விசேஷ பொதுக்கூட்டமொன்று சென்ற சனிக்கிழமை தலைமைக்காரியாலய பரிசோதகர் திரு. வி, மகேந்திரனால் கூட்டப்பட்டது, பின்வருவோர் நிர்வாகசபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

திருவாளர்கள் இ. நமசிவாயம் ஆ. த. சுப்பிரமணியம், க. நாகலிங்கம், க. சிவக்கொழுந்து, சி. சரவணமுத்து, ச.கணபதிப்பிள்ளை, க. சிவகுரு, தி. சீனியர், த. கந்தவனம். கடந்த 28 வருட காலமாக பண்டசாலையின் மனேஜராகக் கடமைபுரிந்துவந்த திரு.வ.வேலுப்பிள்ளையை மீண்டும்மனேஜராக நியமிப்பதெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

### நல்ல சூழ்நிலை

பம்பலப்பிட்டி,வியாழன்

'தற்போதுள்ள அரசாங்கம் நேர்மைமிக்கது. அத்துடன் தனியார்துறையினர் நாட்டின் அபிவிருத்தியில் உரிய பங்கு கொள்ள வேண்டுமென்பதில் அக்கறை கொண்டுள்ளது. இத்துறையில் வெளிநாட்டவரின் முதலீடுகளையும் அரசாங்கம் வரவேற்கும் எனக் கருதலாம். வெளிநாட்டவர் முதலீடு செய்வதற்கான சூழ்நிலை இப்போது சென்ற வருடத்தை விட நல்லதாக அமைந்துள்ளது' என பிரிட்டிஷ் கைத்தொழில்கள் சம்மேளனத்தின் பொருளாதாரப் பிரிவைச் சேர்ந்த திரு.சி. ஜே. ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

திரு. ஜோன்சன் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா மற்றும் மந்திரிகள், அரசாங்க அதிகாரிகள் ஆகியோருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்.

### ஏட்டுக்கல்வியுடன்..

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் நாடுவதில்லை. இளைப்பாறிய பின்னர் உபகாரச் சம்பளம் பெறக்கூடிய உத்தியோகம் அல்லது பொது வாழ்வில் உயர்ந்த கௌரவங்கொடுக்கக்கூடியதொழிலே மக்களின் மனத்திலே பெரிதாகத் தெரிகின்றது. மாணவர்கள் எங்கள் கல்லூரியிலே பாடங்களைத் தெரிவு செய்வதிலே இந்த மனப்பான்மை பிரதிபலிக்கின்றது. மருத்துவம், பொறியியல் ஆகிய இரண்டுமே மாணவராலே பெரிதும் விரும்பப்படுவன. வேளாண்மை இயலும் வணிக இயலும் மாணவராலே குறைவாகக் கணிக்கப்படுகின்றன. வணிகத்திலோ அல்லது கமத்தொழிலிலோ நாம் பெருமைப் படக்கூடிய சாதனைகளைச் சாதிக்க முடியாமலிருப்பதற்கு வேறுவிளக்கம் தேவையில்லை.

**இளைஞர்களின் எதிர்காலம்**

எங்கள் முன்னாலேயே எங்கள் இளைஞரின் ஆக்கசக்தி பெரிதும் வீணாகப்போவதை எங்கள் பெற்றோருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். பொருள் வசதியில்லாத மாணவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தில் உடலை வருத்திப் பிழிந்து உழைக்கின்றனர். ஆனால் பெரும்பான்மையான மாணவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தை எப்படிக் கழிப்பதெனத் தெரியாது தடுமாறுகின்றனர். எங்கள் இளைஞர்கள் தாங்களே தங்களுக்கு எசமான் என்கின்ற நிலைக்கு வந்துவிடுகின்றனர். வீதி மூலைகளிலும் பொது இடங்களிலும் இளைஞர்கள் கூட்டங்கூட்டமாக நின்று பயனில்லாப் பேச்சில் ஈடுபட்டிருப்பதைப் பலமுறையும் காணலாம். இன்னும் சிலர் கெடுதலை விளைக்கும் பொழுது போக்குகளில் ஈடுபடுவர். களியாட்ட விழாக்களிலும், படமாளிகைகளிலும் இளைஞர்கள் வரிசைவரிசையாக அணிவகுத்து நிற்கின்றனர். இங்ஙனம் இவர்கள் வீணாக்கும் பொன்னான நேரம் அவர்களுக்கும், குடும்பத்திற்கும் நாட்டிற்கும் பயன்பட்டால் அதனால் பெரும் நன்மை ஏற்படும். இப்படியான சோம்பலுக்குக் காரணம் மக்களாட்சிமுறை எனக் குறை காண்பாருமுளர். ஆனால் மக்களாட்சி நிலவுகின்ற இங்கிலாந்து,டென்மார்க்கு, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலே இளைஞர்கள் வீணாக நேரத்தை மண்ணாக்குவதில்லை. இந்நாடுகளில் உள்ள இளைஞர்கள் தாமாகவே கமத்திலோ, தொழிற்சாலையிலோ, கால்நடைப் பண்ணையிலோ தொழில் புரிவர். இல்லாவிட்டால் சொந்தமாகத் தொழில் புரிவர். எங்கள் நாட்டிலே நிலவுகின்ற இந்தச் சிக்கலான நிலையைத் தீர்க்கச் சமூகத் தொண்டர்களும், பெற்றோரும் முன்வருதல் வேண்டும்.

### கிராமிய நடனப் போட்டி

யாழ்ப்பாணம், வியா

வடபகுதியில் ஐ. நா. கல்வி கலாச்சார நிறுவனம் கிராமிய நடனப் பாட்டுப்போட்டிகளை அடுத்த மாதம் 23-ம் 24-ம் திகதிகளில் நடாத்தவிருக்கிறது.

சென்ற வாரம் நடைபெற்ற யாழ். மாவட்ட பூர்வாங்க போட்டிகளில் வேம்படி மகளிர் கல்லூரி முதலிடம்பெற்றது.

அடுத்தமாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் இறுதிப்போட்டிகளில் கல்விமந்திரி திரு ஐ. எம். ஆர். ஏ. இரியகொலை கலந்துகொள்வார் என அறியப்படுகிறது.

### சுகாதாரதின விழா

வட்டுக்கோட்டை, வியா.

சுகாதார வாரவைபவத்தையொட்டி அராலியில் சுகாதார வாரம் சிறப்பாக கொண்டாட முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கான வேலைகளில் சுகாதார பரிசோதகர் திரு சி. குமாரசாமி ஈடுபட்டுள்ளார்.

ஜூன் 26-ந் திகதி சனிக்கிழமை சரஸ்வதி வித்தியாசாலை பேச்சுப் போட்டிகள், கும்மி, கதம்ப நிகழ்ச்சிகள் முதலியன நடைபெறும் எனத்தெரிய வருகிறது.

### சுகாதாரத்தின கேடயம்

கோப்பாய், வியாழன்

1964-ம் வருடத்துக்கான ஹைக்கேல் சுகாதாரத்தின கேடயம் கோப்பாய் பகுதிக்கு வழங்கப்படுகிறது. அகில இலங்கையிலும் நடாத்தப்பட்ட சுகாதாரவிழாக்களுள் சிறந்ததென்பதற்காகவே இக்கேடயம் வழங்கப்படுகிறது.

கோப்பாய் சுகாதார விழாச் சபையினர் கேடயம் வழங்கும் வைபவத்தை மிகவும் விமரிசையாகக் கொண்டாடுவதற்கான ஒழுங்குகளைச் செய்கின்றனர். இக்கேடயம் சுகாதார வைத்திய அதிகாரிகள் சங்கத்தாரால் வழங்கப்படவிருக்கிறது.

### வானொலி நிகழ்ச்சிகள்

**வெள்ளி 25-6-65**

**கொழும்பு**

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை. 7-00 துதிப்பாடல்கள், 7-30 பக்திப் பாடல்கள், 8-00 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 காதல் வரம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஞானாஞ்சலி, 7-15 பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சிகள், 9-15 பேச்சு, 9-30 நேயர்விருப்பம், 10-00 புல்லாங்குழல், 10-15 தேர்ந்தஇசை.

### நாலரை லட்சம் ரூபா சாரம் களவு

கொழும்பு, வியா.

கிராமவிருத்தி குடிசைக் கைத்தொழில் இலாகாவிலிருந்து ரூபா 4 1/2 லட்சம் பெறுமதியான சாரங்கள் களவாடப்பட்டது சம்பந்தமாக புலன்விசாரணை செய்யுமாறு உள்நாட்டமைச்சர் இரகசிய பொலிசாரைக் கோரியுள்ளார்.

இதுசம்பந்தமாக 3 உத்தியோகத்தர்கள் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டனரென அறியப்படுகிறது.

களவாடப்பட்ட சாரங்களில் அமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான சாரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.


## வரி விளம்பரம்

### கல்வி

பயிற்றப்பட்ட உபாத்தியாயர்கள் இலங்கைப் பல்கலைக்கழக பட்டபரீட்சைக்கு வெளிப் பரீட்சார்த்திகளாகத் தோற்றலாம். ஜீ. ஏ. கியூ வகுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆடி 1-ம் திகதி பி ஏ. வகுப்புகள் ஆரம்பமாகும். தாமதம் செய்யாமல் உடனே சேருங்கள். யூனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 550

ஆடிமாதத்தில் எங்கள் ஜி. சி இ. சாதாரணம், வர்த்தக வகுப்புகளில் சேரும் 15 மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கப்படும். விபரங்களுக்கு எழுதவும். யூனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை, வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 551

மிகவும் நல்ல செய்தி. நல்ல அனுபவமுள்ள பட்டதாரிகளால் பகல் / மாலை ஜி.சி.இ, உயர்தரம் / சாதாரணம், வகுப்புகளுக்கு தூய / பிரயோகம்/ உயர்தர கணிதம், இரசாயனம், பௌதீகம், உயிரியல், தாவரவியல், விலங்கியல், ஆங்கிலம் ஆகியபாடங்கள் விசேஷமாகக் கற்பிக்கப்படுகின்றது. உடன்சேருபவர்களுக்கு சித்தி உத்தரவாதம், யூனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 552


### சமாஜம் நடத்தும் பாராட்டு விழா

சுழிபுரம், வியாழன்

வலி-மேற்கு கிராம முன்னேற்ற சங்க சமாஜத்தினர் வலி மேற்கு காரியாதிகாரியாக கடமையாற்றி பதவி உயர்வு பெற்று மாற்றலாகிச் செல்லும் திரு. டீ' டபிள்யூ செல்வரத்தினத்தின் சேவை நலம் பாராட்டி ஓர் பாராட்டு விழா நடத்தவிருக்கின்றனர்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இவ்விழா நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


### விற்பனைக்கு

வண்டிக்கடை ஒன்று 9 அடி நீளம், 6 அடி அகலம். சில்லுகள் இரும்பினால் செய்யப்பட்டது. இரும்பு வேலைகள் கூடியது. சாமான்கள் வைத்து விற்பனை செய்வதற்கு சகலவசதிகளும் உள் செய்யப்பட்டிருக்கிறது. கோயில் திருவிழாக்காலங்களிலும் வேறு விசேஷ தினங்களிலும் அவ்விடத்திற்கு கொண்டு சென்று வியாபாரஞ் செய்யக் கூடியகடை, வீ. சிவசம்பு, 30, கேசவபிள்ளையார் வீதி, வண்ணார்பண்ணை மேற்கில் பகல் நேரத்தில் பார்வையிடலாம். 547

புதிதாக இழை போடப்பட்ட 11×28 பயர்ஸ்ரோன் (Firestone) ட்ருக்ரர் ரயர் விற்பனைக்கு உண்டு. கணேசன் பேக்கரி, நல்லூர் மார்க்கெட், யாழ்ப்பாணம் 561

யாழ்ப்பாணம் வேம்படி ரோட்டிலிருக்கும், அதிக வருமானமுள்ள வியாபாரம்செய்யக்கூடிய பலசரக்குக்கடை சகல தளபாடங்களுடன் விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். விபரம்: நா, கனகரத்தினம் "ராஜா கபே" 72/4 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 562


### சிறைசெல்ல விரும்பாதவர்

கொழும்பு, வியா.

திருட்டுக்குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதன் காரணமாக சிறைத்தண்டனைபெற்ற இளைஞரொருவர் தற்கொலைமுயற்சியில் நஞ்சை உட்கொண்டதாக சந்தேகித்து கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு விரைந்து எடுத்துச்செல்லப்பட்டார்.

அவரது நிலை அவ்வளவு அபாயகரமானதாகவில்லையென அறியப்பட்டதும் றிமாண்ட் சிறைக்கு அனுப்பப்பட்டார்.


REGAL - JAFFNA
NOW SHOWING
GLAMOROUS WOMEN OF THE WORLD
(Adults only)
(Eastman Color)

இன்று முதல் மகத்தான ஆரம்பம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)

விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹெட்டன்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2-00, 6-00, 9-30
(சனி, ஞாயிறு 4 காட்சிகள்)

ராமராவ், அஞ்சலிதேவி, ஜெமினி கணேசன்
மற்றும் பலர் நடித்த

லவகுசா

(முழு நீள கலர்ப்படம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறக்கோட்டையில் கோர தீ விபத்து

## பத்து லட்சம் ரூபா நஷ்டம்

### ஒன்பது கடைகள் நாசமாகின

கொழும்பு, புதன்

**கொழும்பு புறக்கோட்டையிலுள்ள குமார வீதியில் (பிரின்ஸ் வீதி) இன்று மாலை ஏற்பட்ட தீ விபத்தில் புடவைக் கடைகள், தேநீர்க்கடை உட்பட ஒன்பது கடைகள் நாசமாகின. இக் கோர தீ விபத்தினால் ரூபா 10 லட்சத்துக்குமதிகம் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இத் தீ விபத்து இங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

இக் கோரதீவிபத்து இன்று மாலை 5.30-க்கு ஏற்பட்டது. தீ விபத்துக்கான காரணம் உடனடியாகத் தெரிவிக்கப்படாதபோதிலும் கெந்தகம் போன்ற வெடிமருந்துகள் விற்பனைசெய்யப்படும் ஒரு கடையில்தான் முதலில் தீ விபத்து ஏற்பட்டிருக்கிறதென்றும் இதனைத் தொடர்ந்தே மற்றைய கடைகளில் தீ பரவி இருக்கிறதென்றும் கூறப்படுகிறது.

புறக்கோட்டை இன்றுமாலை ஒரே புகைமண்டலமாகக் காட்சியளித்தது.

தீயைப் பரவவிடாமல் அணைப்பதில் தீயணைக்கும் படையினர் தீவிரமாக ஈடுபட்டிருந்தபொழுதிலும் நான்கு மணித்தியாலத்துக்கும் பின்னரே தீயைக் கட்டுப்படுத்த முடிந்தது.

தீ விபத்தினால் உயிர்சேதம் ஏற்படவில்லை என்று முதலில் கிடைத்த தகவல்கள் கூறுகின்றன.

---

# நியாயமான அளவு தமிழ் உபயோகம்

## அரசாங்கத்தின் மொழிக்கொள்கை: பதில் நீதி மந்திரி விளக்கம்

### "சிம்மாசனப் பிரசங்கத்தில் கூறப்பட்டதில் சிறிதும் மாற்றம் இருக்காது"

கொழும்பு, புதன்

**தமிழ்மொழி சம்பந்தப்பட்டமட்டில் 'நியாயமான அளவு தமிழ்மொழி உபயோகம்' என்பதை மட்டுமே தேசிய அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதென்றும் இதே வேளையில் இன்றைய அரசாங்கத்தின் உத்தியோகமொழி "சிங்களம் மட்டுமே" என்றும் செனட் சபையில் வர்த்தக மந்திரியும், பதில் நீதிமந்திரியுமான செனட்டர் டாக்டர் எம். வி. பி. பீரிஸ் தெரிவித்தார்.**

**செனட்டர் ஏ. தஸநாயக்காவின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில்தான் மேற்கண்டவாறு வர்த்தக மந்திரி கூறினர்.**

யாழ்ப்பாணத் தொகுதி எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் 50: 50 சமபலக்கமாக செனட்டர் தஸநாயக்கா கேட்ட கேள்விக்கு டாக்டர் பீரிஸ் பதிலளிக்கையில்; திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தேசிய அரசாங்கத்தின் ஆதரவாளரே என்றும் அவரின் ஐம்பதுக்கைம்பது கோரிக்கையை அரசாங்கம் வழங்காதென அறிக்கைவிடுவதற்குக் காலம் கடந்துவிட்டதென்றும் அவ்வித அறிக்கையை இப்பொழுது வெளியிடவேண்டிய அவசியம் எதுவும் இல்லையென்றும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

அண்மையில் நியமிக்கப்பட்டுள்ள கதிர்காம புனிதப்பிரதேசத்திற்கான ஆலோசனைக் குழுவில் முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்படுவாரா என்று செனட்டர் ஏ. ஆர். எம். ஹமீம் கேட்ட கேள்விக்கு தலைமைதாபான மந்திரி செனட்டர் எம். திருச்செல்வம் பதிலளிக்கையில், குறிப்பிட்ட ஆலோசனைக் கமிட்டியில் முஸ்லிம் ஒருவரை நியமிக்கத் தாம் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக பதிலளித்தார்.

#### மாற்றம் இருக்காது

செனட் ஒத்திவைப்புப் பிரேரணையின் போது எதிர்க்கட்சி அங்கத்தவர் செனட்டர் ரெஜி பெரேராவின் கேள்விகளுக்கு சபை முதல்வரும் வர்த்தக மந்திரியுமான செனட்டர் எம். வி. பி. பீரிஸ் பதிலளிக்கையில் தேசிய அரசாங்கத்தின் சிம்மாசனப் பிரசங்கத்தின் போது மொழிக்கொள்கை பற்றி என்ன தெரிவிக்கப்பட்டிருந்ததோ அவை அப்படியே அமுலாகும் என்றும் அதில் எந்தவித மாற்றமும் செய்யப்படமாட்டாது என்றும் கூறினர்.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் பேச்சு சம்பந்தமாக தினசரி பத்திரிகையொன்றில் வந்த செய்தி பற்றி குறிப்பிட்ட செனட்டர் ரெஜி பெரேரா, வடக்குக் கிழக்கு மாகாணத்தில் தமிழ் ஆட்சிமொழியென்றும் வேறு மாகாணங்களில் அதைத் தொடர்பு மொழியாகக் கொள்ளலாம் என்றும் மொழிப்பிரச்னை சம்பந்தமாக திரு. செல்வநாயகம் பல அறிக்கைகள் விடுகிறார் என்றும் சமஷ்டி கிடைக்குமென்றும் அவர் கூறுகின்றார். இதுபற்றி அரசாங்கம் விளக்கமான அறிக்கை வெளியிடவேண்டும் என்று கூறினர்.

இதற்கு மந்திரி பீரிஸ் பதிலளிக்கையில், எந்த முறையிலும் தனிப்பட்ட இடத்தில் பேசும் பேச்சை ஒரு அறிக்கையாக எடுத்துக்கொள்ளக் கூடாதென்றும் அது பற்றி அரசாங்கம் கவனியாதென்றும் மொழி விஷயத்தில் சிம்மாசனப்பிரசங்கத்தில் தெரிவிக்கப்பட்டது அப்படியே செயல்படுத்தப்படும்என்றும் கூறினர்.

---

### பல்கலைக்கழகத்தை விஸ்தரிக்கவேண்டும்

கொழும்பு, வியாழன்

இலங்கைப் பல்கலைக்கழகத்தை விஸ்தரிக்கவேண்டிய அவசியத்தை பல்கலைக்கழகத்தினர் மீண்டும் கல்வி மந்திரிக்கு எடுத்துக் கூறியுள்ளனர்.

வடமாகாணத்திலும் தெற்கு மாகாணத்திலும் பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்படவேண்டுமென பல்கலைக்கழக துணைவேந்தர் சேர் நிக்கலஸ் அட்டிகலை ஒரு வருடத்திற்கு முன்னர் அபிப்பிராயம் வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

---

### மரதன் ஓட்டப் போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய வருடாந்த விளையாட்டுப்போட்டிகளை முன்னிட்டு நடத்தப்படும் 7 மைல் மரதன் ஓட்டப்போட்டி நாளை காலை 6 மணிக்கு சுன்னாகம் சந்தை மைதானத்திலிருந்து ஆரம்பமாகிறது. கடந்த 15 வருடங்களாக இப்போட்டியை வைத்தீஸ்வர வித்தியாலயம் நடத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இம்முறை இப்போட்டியில் சுமார் 40 வீரர்கள் பங்குபற்றுவதாகவும் முதல் மூன்று வீரர்களுக்கு வெள்ளிக்கிண்ணங்கள் பரிசளிக்கப்படும் எனவும் இப்போட்டி [illegible] தெரிவித்தார்.

---

# வவனியாவில் கிழமைச் சந்தை

## விவசாயிகளுக்கு உதவியளிக்க நகரசபை நடவடிக்கை

வவனியா, வியாழன்

விவசாயிகள் தங்களது விளைபொருள்களை வவனியா சந்தையில் கொண்டுவந்து விற்பனை செய்ய வசதி செய்துகொடுக்கும் முகமாக இங்கு கிழமைச் சந்தை அமைக்கவேண்டுமென்று வவனியா நகரசபை இரண்டாம் வட்டார அங்கத்தவர் திரு. சா. மு. யூசுப் கொண்டுவந்த பிரேரணை நகரசபை மாதாந்தக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

வவனியா நகரசபையின் மாதாந்தக் கூட்டம் அண்மையில், தலைவர் திரு. ம. பொன்னையா தலைமையில் நடைபெற்றது.

கூட்டம் ஆரம்பமாகு முன்னர் திரு. ச. சுப்பிரமணியம், இச்சபையில் முன்னர் செயலாளராகக் கடமையாற்றிய திரு. என். ஏ. அல்பிரட்டின் மரணத்தையிட்டு இச்சபை அனுதாபப்படுவதாகப் பிரேரித்தார். இப்பிரேரணையை தலைவர் ஆமோதித்ததைத் தொடர்ந்து சபை உறுப்பினர்கள் இருநிமிட மௌனம் அனுஷ்டித்தனர்.

வவனியா சந்தையில் கிழமைச்சந்தையை அமைக்க நடவடிக்கை எடுப்பதென்றும் அரசாங்க அதிபரின் இல்லத்துக்கு முன்புறமும் கிராமக் கோர்ட்டுக்கு பின்புறமும் சந்தையிடமாகத் தெரிவு செய்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

மா, பலா, தென்னை, கமுகு, வாழை, வீடுகள், செய்பயிர்கள் யாவற்றுக்கும் கடந்த சூறாவளியால் அதிக சேதமேற்பட்டிருப்பதால் சோலைவரியைத் திருத்தி அமைக்க வேண்டுமென இச்சபை தீர்மானிக்கிறது என்று 3-ம் வட்டார அங்கத்தவர் திரு. இ. சங்கரப்பிள்ளை ஒரு பிரேரணை கொண்டுவந்தார்.

இப்பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, தலைவர் உட்பட திரு. ச. சுப்பிரமணியமும் விளக்கிப் பேசினர். இக்கருணத்தில் "சோலைவரியைத் திருத்தியமைக்க உ. ஆ. ஆணையாளர் உடன்படமாட்டார். இதற்கென நிரும்பியும் மதிப்பீடுக்காந்தோரால் அதிகாரிகள் விஜயம் செய்து திரும்பி மதிப்பிட்ட பின்புதான் திருத்தி அமைக்க முடியும் ஆனால் கஷ்டப்பட்ட வரியிறுப்பாளர், தனிப்பட்ட முறையில் விண்ணபித்தால் அதைத் தலைவர் விசாரணை செய்து விண்ணப்பதாரர்கள் சலுகை பெறத் தகுதியுள்ளவர்கள் என தலைவர் திருப்திப்பட்டால் அதை சபைக்கு சமர்ப்பித்து அவர்களுக்கு வேண்டிய சலுகை செய்யலாம்" என தலைவர் விளக்கப்படுத்தினர். திரு. ச. சுப்பிரமணியம் கூறும்போது விஷயம் தெரியாமல் பிரேரணைகளைக் கொழும்புக் கந்தோருக்கு அனுப்புவது இச்சபையின் கௌரவத்தைக் குறைப்பதாகும். ஆனபடியால் இப்பிரேரணையை வாபஸ் பெற்று தலைவரின் யோசனைப்படி சலுகை செய்ய உடன்படவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். ஆனல் பிரேரித்தவர் இதற்கு உடன்படாமையால் இப்பிரேரணையை உ. ஆ. ஆணையாளருக்கு அனுப்ப சபை உடன்பட்டது.

---

# தகராறை நீடிக்க . . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தார் 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 2-ந் திகதி திரு. அசீஸ் அனுப்பிய பதிலில் சர்வகட்சி மகாநாடுபற்றி பின்வருமாறு எழுதியிருக்கிறார்:

#### வட்டமேசை மகாநாடு பற்றிய கருத்து

"மொழி, குடியுரிமை, குடியேற்றம் ஆகிய தேசியப் பிரச்சினைகள் பரிசீலித்து தீர்த்து வைப்பதற்கு சர்வகட்சி மகாநாடு வேண்டுமென்ற உங்கள் கருத்தை நான் ஆதரிக்கவில்லையென்பதைசுட்டிக்காட்ட விரும்புகின்றேன், பரிகாரம் காணுவதற்கு பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டியவர்கள் அதிகாரத்தில் இருக்கும் கட்சியினரே என்பதேஎனது கருத்து. இத்தகைய விவாதத்திற்குஇடமான பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் எதிர்க்கட்சியினர் அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பார்களென்று எதிர்பார்ப்பது மிகவும் துணிகரமானசெயல், சர்வகட்சிமாநாடு தாமதத்தை ஏற்படுத்தி இறுதியில் பெருங்குளறுபடியில் முடியும் என்பது தவிர்க்க முடியாதது. அதற்குப் பதிலாக அரசாங்கமேபரிகார நடவடிக்கைகளை மேற்கொள்வதுதான் மிகத் தகுந்தது, இவ்வாறு இல்லாவிட்டால் இப்பிரச்னைகள் என்றுமே தீரப்போவதில்லை. இதை நான்உங்களுக்கு எடுத்துக்காட்டத் தேவையில்லை".

பரிபூரணமான எமது நிலையும் இதேதான்,

பெல்ஜியத்தில் ஏறத்தாள இணையாட்சி என்று நாங்கள் குறிப்பிட்டதுபற்றி திரு பொன்னம்பலம் கூறுகிறர். பெல்ஜியத்தில் நடப்பதுபற்றி நாம் அறியாதிருக்கவும் இல்லை நாம் பொய்கூறவும் இல்லை. ஏறத்தாள இணைப்பாட்சி அளிக்கும் அரசமைப்பு மக்கள்முன் சமர்ப்பிக்கப்பட்டு பொதுத் தேர்தலில் தீர்ப்புக்கு விடப்பட்டது இப்புது அரசமைப்பை நிறைவுவதற்கு 2/3 பெரும்பான்மைவாக்குகள் தேவைப்பட்டன, ஆனல் இதை அடைவதற்கு ஓரேஒரு வாக்குத்தான் பற்றாது போகிற்று.

இதைநாங்கள் எமக்கு செவிமடுத்தவர்களுக்கு தெளிவாக விளக்கியுள்ளோம்.

1948ம் ஆண்டில் திரு. பொன்னம்பலம் ஐ. தே. கட்சியில் சேர்ந்ததை நாம் கண்டித்தோம். ஆனல் 1948லோ அல்லது 1960 லோதானும்ஐ. தே. கட்சியில் பார்க்க1965 ல் நாம ஐ. தே.கட்சியைசேர்வதில்இருந்த சூழ்நிலைகள்1948 ல் இடம்பெற்ற சம்பவங்களிலும் பார்க்க முற்றிலும் மாறுபட்டவையாகும், இந்த வித்தியாசம் மிகவும் காத்திரமானது.

---

#### கதாப்பிரசங்கங்கள்

இன்று மாலை 6 மணிமுதல் வண்ணை சிவன்கோவிலில்மகா பாரதவிரிவுரையில் 'பாஞ்சாலி சுயம்வரம்' என்னும் பொருள் பற்றியும்

இரவு 7-15 முதல் கந்தர் மடம் பனம்ஜேட் விநாயகராலயத்தில் 'முருகனும் முதாட்டியும்' என்னும் பொருள்பற்றியும் முத்தமிழ்மணி எஸ். எஸ் மணிபாகவதர் கதாப்பிரசங்கம் செய்வார்.

---

புதுடில்லி, ஜூன் 24

இம்பால் நதி மீதுள்ள ஒரு பாலத்தை நாகர்கள் வெடிவைத்துத் தகர்த்துவிட்டதாயும், மற்றிரண்டு பாலங்களைத் தகர்க்க முயன்றதாயும் அறிவிக்கப்படுகிறது. இதுசம்பந்தமாக 15 நாகர்கள் கைது செய்யப் பட்டிருக்கிறர்கள், பாதுகாப்புப் படைகள் அங்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org